# சட்டத்துறை வாழ்வில் பொன்விழா காணும்

க.மு.தர்மராஜா



0710836901
mihintale

# சட்டத்துறையில் கமுதர்

சட்டத்துறையில் திரு.க.மு.தர்மராஜா
(சட்ட ஆலோசகரும் பிரசித்த நொத்தாரிசும்) அவர்கள் பொன்விழா
கண்ட தினமான 2014.01.01 திகதியன்று வெளிப்படுத்தப்பட்ட
வாழ்த்துரைகளின் தொகுப்பு நூல்

தொகுப்பு
டாக்டர் எஸ்.மகேன்

தினக்குரல்
An Independent Daily Voice in Tamil

*1. 1. 2014 திகதி பிரசுரிக்கப்பட்டது.*

# பொன்விழாகாணும் பெருந்தகையான் கந்தையா முருகேசு தர்மராசா

**டாக்டர் சு. மகேந்திரராஜா**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவார்
- என்பது வள்ளுவர் வாக்கு.

தனது வாழ்வை அர்த்தமுள்ளதாக வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதநேயப் பண்பாளர் சட்டாலோசகர் தர்மராசா அவர்கள் இவ்வாண்டு நிறைவில் அதாவது (2014. 01. 01) நீதித்துறையில் பொன்விழா ஆண்டில் காலடி எடுத்துவைக்கின்றார். தான் வாழும் காலத்தோடு ஒன்றி, இப்பெருந்தகை சமூகத்திற்கு ஆற்றிய தொண்டுகள் ஏராளம் எண்ணில் அடங்காது. எவருக்கும் உதவிபுரியும் பெருநோக்கினைக் கொண்ட பெருமனிதர். சட்ட ஆலோசனையை வெறும் தொழிலுக்கு அப்பால் நாடிவருகின்றவர்களின் நலனில் அக்கறை கொண்டு செயற்படும் இவர் தனது தொழில்சார்ந்த செயற்பாடுகளுக்கு அப்பால் நாடிவருவோர்க்கு உதவிக்கரம்

நீட்டும் பெருந்தகை. தேவையறிந்து இயலுமான உதவிகளைச் செய்யும் பெருந்தகை ஒருபோதும் புகழ்விரும்பிச் செயற்பட்டவர் அல்லர்.

மிகுந்த தமிழ்பற்றுக் கொண்ட இவரை அடிக்கடி தமிழ்ச் சங்கத்தில் காணலாம். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராக இணைந்து கொள்ளாதபோதும், கொழும்புத் தமிழ்ச் சங்கம் தமிழ் தேசிய இனத்தின் சொத்தென நினைத்து தமிழையும் சட்டத்துறையையும் வளர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றார். இலக்கியவாதிகளிடம் அன்பும் மதிப்பும் கொண்ட இவர் அவர்களைக் கைதூக்கிவிடுவதில் பின்நிற்பதில்லை. யாராவது புத்தக வெளியீடு என அழைத்தால் அங்கு பிரசன்னமாகி சிறப்புப் பிரதிகள் வாங்கி ஊக்கமளிப்பார். சிறப்புப் பிரதிகள் வாங்க அழைக்கப்படாத பட்சத்திலும் வெளியீட்டு விழாக்களில் ஒருபார்வையாளனாக, வாசகனாக கலந்துகொண்டு கூட்டம் முடியும்வரை அமர்ந் திருப்பதுடன் பிரதிகள் வாங்குவதையும் கண்டிருக்கின்றேன். மொழியை நேசிக்கும் எவரும் இலக்கியத்தையும் நேசிப்பார் என்பதற்கு அப்பால் தாய்த் தேசத்திலும் பற்றுக் கொண்டவராக இருப்பார். அந்தவகையில் தமிழையும் தாயகத்தையும் நேசிக்கும் அவர் அரசியலில் நேரடியாக இறங்காதபோதிலும் தீர்க்கமான அரசியல்வாதிகளுடனும் உறவைப்பேணினார். தனது கருத்துக்களைத் தயக்கமின்றி அவர்களிடம் வெளியிடும் திறன் இவரிடம் இருந்தது.

ஒரு பானைசோற்றுக்கு ஒரு சோறு பதம் - நயமடைந்தோர் நலிந்துகிடக்கும் பூமியில் நானும் ஒருவன் - ஒருசோறு! ஒரு அன்பன்ர தத்துவரூபமாக, யதார்த்தமாக உணர்ச்சி மேலீட்டால் உண்மைகளை வெளிக்கொணருமிடத்து ஒவ்வொரு வாசகரும் சிரத்தையோடு வாசிக்க உந்தப்படுவார்கள். மேலும் நயமடைந்தோரில் நாமும் இருக்கிறோம் என ஏக்கம் அடையலாம். சமுதாயம் முற்றாக மாறவில்லை. நன்மை பெற்றோர் நன்றியென இதயபூர்வமாக அனுமதித்தால் அன்பருக்கு நாம் அளிக்கும் வெகுமதி வேறில்லை.

அன்பர் என குறிப்பிட்டெழுதுகிறேன் என் ஆத்ம நீண்டகால நண்பர் என எழுத பேனா கூடத் தயங்குகிறது. அவ்வளவிற்கு மேலான ஆசான் இடத்தில் நண்பன் என்னும் இடத்தைப்பெற நான் தகுதியுடையவனா என மனதில் பலகோணங்களில் இருந்து கேள்விகள் எழுகின்றது! அந்த உத்தமர் தான் இன்று சட்டத்துறையில் பொன்விழாவில் காலடி எடுத்து வைக்கும் மாண்புமிகு க.மு.தர்மராசா ஆவார்.

சர்வகலாசாலை சென்று பட்டங்களில் மேல் பட்டங்களாக கோர்த்து வெளியுலகில் உலாவரும் பல அறிவுத் திறனாளிகளை, பார்த்து, பழகி உருவாக்க உடந்தையாக இருந்துள்ளேன். சர்வகலாசாலை சென்றால்தான் நம் அறிவை விருத்திசெய்ய முடியும் என்ற பதத்தை பொய்யாக்கிய அன்பர் தர்மராசா. அமரத்துவம் அடைந்த மாமனிதர் குமார்

பொன்னம்பலம் தமிழ் இனத்திற்கு பாராளுமன்றம் செல்லாது செய்த அளப்பரிய சேவை உலகம் பூராகவும் பரவியிருப்பதை, ஒவ்வொரு தமிழ் மகனும் உணர்வான். குமார் செய்த சேவைகளில் எந்தப் பங்களவிற்கு நித்தம் பாராளுமன்றம் செல்லும் மகான்கள் செய்திருக்கிறார்கள் என்பதை தமிழ் மக்களே விடைபகிர வேண்டும். அதேபாணி, அன்பர் தர்மராசா சட்டக்கல்லூரி செல்லாது செய்த அளப்பரிய சேவைகளால் நயமடைந்தோர் பல்லாயிரம்.

அது மட்டுமல்ல ஏனையோரும் அறியக்கூடிய சட்ட நுணுக்கங்களை மிக எளிதான முறையில் மக்களுக்கு விளக்குவதில், தான் ஒரு மூலப்பொருளாக இருந்து நீதித் தலங்களில் தம் கட்சிக்காரர்களுக்கு பெற்றுக்கொடுத்த வெற்றி வாகைகள் அளப்பரியன! இருவர் பாணியும் குமார் - தர்மராசா வெவ்வேறு திசைகளாக இருந்தாலும், அடிப்படை ஒற்றுமையில் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் (தகமைகளில் பாரியவெளி) ஆழ்ந்த நெருக்கத்துடன் நேசித்து வந்தனர். குமாரின் இழப்பு தமிழ் இனத்திற்கு ஏற்பட்ட மரண அடி! அன்பர் தர்மராசாவின் வாழ்வில் பெரியதோர் அத்தியாயத்தை இழந்த இழப்பு!

இன்று பொன்விழாக்காணும் அன்பர் தர்மராசா பற்றி நான் அறிந்த உண்மைகள், அனுபவங்கள், பெற்ற உதவிகள் எல்லாவற்றையும் அடுக்கிக்கொண்டுபோனால் எடுத்த முயற்சி கைகூடாமல் போகும் என்ற பீதியினால் வாயடைத்து

நிற்கின்றேன். உண்மையிலே அவர் பொருட்டு என் குடும்பத்திற்குச் செய்த நன்மைகள், வெற்றிகள் பல. வெற்றி களுக்கு சட்டநுணுக்கங்களை நீதியரசர்கள் பழைய சட்டஏடுகளைப் புரட்டி தீர்ப்பளித்த காட்சிகள் இன்றும் என்மனதில் பசுமையாக உள்ளது!.

இந்தப் பெருமகனின் பொன்விழாவையொட்டி என் ஆழ்ந்த நன்றிக்கடனைக்கூட எழுத்துவடிவில் முற்றாக நல்கமுடியாத பாவி! சமுதாயத்தில் ஒதுக்கமாக இருந்த என் சுபாவத்தை மாற்றி சிறந்த மனிதனாக, பல சட்டமேதைகள் குழாமிலோ, வைத்திய நிபுணர்கள் சிலர் முன்னிலையிலோ என்னைத் தோற்றி விளங்கச் செய்த பெருமையைக் கூறவா? தனக்கு உற்ற நண்பன் என சீர்தூக்கி மேல் அந்தஸ்தில் வைத்த கருணையைக் கூறவா? அல்லது தன் உறைவிடத்தை என் உறைவிடமாக பாவித்து என் அன்புக்கினியவர்களை தங்க வைத்த பெருந்தன்மை களைக் கூறவா? இவையெல்லாவற்றையும் எப்படி மறப்பேன். பொன்விழாக் காணும் உத்தமனை நினைக்க உள்ளம் கலங்குகிறது.

அவரது சேவை வாழ்நாள் முழுவதுமே மறக்க முடியாத வீரதீரச் செயல்கள் ஆகும். அன்பர்கள், ஆதரவு பெற்றோர்கள் அவரது சேவை **பொன்விழா** மட்டும் அல்லாது **வைரவிழா** நோக்கிச் செல்லுமென விரும்புகிறார்கள். பெருந்தகை மகனே! நீடுழிவாழ என் ஆழ்ந்த அன்பான ஆசிகள்!

VIRAKESARI ONLINE
வீரகேசரி
WWW.VIRAKESARI.LK

(2014. 01. 01 புதன்கிழமை பிரசுரிக்கப்பட்டது)

# சட்டத்துறைப் பணியில் 50 அகவைகள்

**சண்முகம் இராமலிங்கம்**
**இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்,**

திருவாளர் க. மு. தர்மராசா அவர்கள் இற்றைக்கு சரியாக ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் சட்டம் சார்ந்த பணிகளில் தம்மை ஈடுபடுத்த ஆரம்பித்தார். முதலில் காலஞ்சென்ற பிரபல நியாயதுரந்தரர் திரு. என். ரி. சிவஞானத்தின் உதவியாளராகவும் அத்துடன் சிறிது காலத்தின் பின்னர் நாடறிந்த சட்டவாதி எஸ். ஆர். கனகநாயகம் அவர்களது உதவியாளராகவும் பலகாலம் பணியாற்றினார். அதன்பின்னர் பிரசித்த நொத்தாரிசு பரீட்சையில் சித்திபெற்று யாழ்ப்பாணத் திலேயே தனது தொழிலை சிறப்புறத் தொடர்ந்தார். ஆதனச் சட்டவறிஞர் என்று அழைக்கப்படும் நொத்தாரிசுப் பதவியில் அவர் நேர்த்தியாகவும் கண்ணியமாகவும் செயலாற்றி வந்தமையால் அவரது சேவை மிகவும் பிரகாசித்தது.

குடியியல் நடைமுறைச் சட்டக்கோவையை "கரைத்துக் குடித்தவராகவும்" சிவில் நீதிமன்ற செயற்பாடுகள் பற்றிய நுண்ணிய அறிவைப் பெற்றவராகவும் விளங்குகின்றார். நொத்தாரிசு தொழிலில் மிகுந்த நேர்மையையும் கண்ணியத்தையும் பேணுபவர். தேசவழமைச் சட்டம் பற்றிய தெளிவான அறிவு கொண்டவர். பல்கலைக் கழகத்திலோ சட்டக் கல்லூரியிலோ சட்டம் பயிலாவிடினும் இரண்டு சந்ததிகளைச் சேர்ந்த பல சட்டத்தரணிகள் இவரிடம் சட்டாலோசனை பெற்றுவருவதோடு அவர்களது ஐயம் திரிபுகளையும் தெளிவுற விளக்குவார்.

1995 முதல் கொழும்புக்கு இடம்பெயர்ந்த திரு. தர்மராசா அவர்கள் இளம் சட்டத்தரணிகளின் சிறந்ததொரு வழிகாட்டியாக இருந்துவருவதுடன், காணி வழக்குகள், தத்துவ வழக்குகள், விவாகரத்து வழக்குகள் உள்ளிட்ட குடியியல் வழக்குகளுக்கான பிராது, மனு, சத்தியவோலை, சொத்துப் பட்டியல் போன்றவற்றை வரைந்தும் ஆலோசனை வழங்கியும் வருகின்றார்.

இவரது சட்டப் புலமையை நன்கறிந்த உச்ச நீதிமன்ற பிரதம நீதியரசர்களாயிருந்த கனம் ஜி. பி. எஸ். த சில்வா மற்றும் கனம் எஸ். சர்வானந்தா போன்றோரின் பரிந்துரைகளின் பேரில் இவரது தேசிய அடையாள அட்டையில் "*பிரசித்த நொத்தாரிசும்* ***சட்ட உதவியாளரும்***" என்ற தொழிற்பெயர் இடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அரச சேவையிலிருந்து இளப்பாறிய பின்னர் ஒரு பிரசித்த நொத்தாரிசுவாக தொழிலாற்றிவந்த என்னை இற்றைக்குப் பத்தாண்டுகளுக்கு முன்னர் தனது பங்காளராக சேர்த்துக் கொண்டதைத் தொடர்ந்து ஆதன சட்டவறிஞர் எனப்படும் நொத்தாரிசு தொழிலை நாங்கள் இருவரும் இதுவரை இணைந்து ஆற்றிவருகின்றோம். இக்காலப் பகுதியில் எங்கள் அனுபவங்களை நாங்கள் இருவரும் பகிர்ந்து கொண்ட அதேவேளை நான் அவரிடமிருந்து கற்றவையே அதிகமாகும். இதற்காக நான் அவருக்கு நன்றிக்கடனுடையேன்.

ஆங்கில மொழியில் சாதனங்களை வரையும் ஆற்றல் அவருக்கு சற்றுக் குறைவாயிருப்பினும் என்னால் தயாரிக்கப்படும் வரைபுகளிலுள்ள மொழிநடையையும் நுணுக்கமான பகுதிகளையும் விளங்கி நயந்து பாராட்டுவதிலும் அவற்றில் காணப்படும் சட்ட வழுக்களை சுட்டிக்காட்டுவதிலும் தர்மராசா அவர்கள் சமர்த்தராவார்.

சிங்கள மொழியில் பேசவோ எழுதவோ தெரியாத போதிலும் தர்மராசா அவர்கள் சிங்கள மொழியிலுள்ள காணிப்பதிவேடுகளையோ நீதிமன்ற ஆவணங்களையோ இனங்காண்பதில் வல்லவர். இதனால் அவருக்கு சிங்களம் தெரியுமென்றும் தெரியாதவர் போல் பாசாங்கு செய்கிறார் என்றும், அதிகாரிகள் ஆரம்பத்தில் கருதினர். உண்மையிலேயே தனது அனுபவத்தைக் கொண்டும் அந்தந்த ஆவணங்களின்

அமைப்பை அடிப்படையாக வைத்துமே அவற்றை அவர் இனம் கண்டுகொள்கிறா ரென்பதை உணர்ந்த பின்னர் அவர்கள் எல்லோரும் அவருக்கு முழு ஒத்துழைப்பை வழங்கிவருவதோடு அவரை மிகவும் மதிக்கவும் நேசிக்கவும் தொடங்கினர்.

இலங்கையில் இன்று முதல்நிலை வகிக்கும் சனாதிபதி சட்டாலோசகர் பாய்ஸ் முஸ்தாப்பா அவர்களுக்கு ஒருமுறை இவர் அறிமுகம் செய்த ஒரு சேவைபெறுநருக்காக அவரது உதவிச் சட்டத்தரணியால் வரையப்பட்டு திரு. முஸ்தாப்பா அவர்களால் திருத்தி அனுமதிக்கப்பட்ட மனுவொன்றை வாசித்த தர்மராசா அவர்கள், அது தொடர்பான மேலுமொரு சட்டக் கருத்தை அவரிடம் முன்மொழிந்தபோது அவர் அதனை முற்றாக ஏற்று நன்றிதெரிவித்து அதனை உடனே அந்த வரையில் சேர்க்குமாறு தனது உதவிச் சட்டத்தரணியைப் பணித்தார். இச்சம்பவம் இப்போதும் என் நினைவில் பசுமையாயுள்ளது.

திரு. தர்மராசா அவர்கள் காரைநகரைச் சேர்ந்த குலம் கோத்திரம் பேணும் கடும்போக்குடைய சந்ததி யொன்றின் வழித்தோன்றலாயினும் அவரிடம் அத்தகைய கடும்போக்கு அறவே கிடையாது. இளம்பராயத்திலிருந்தே இடதுசாரி சிந்தனை யாளராக வளர்ந்த தர்மராசா அவர்கள் தயாள சிந்தையும் இரக்கமுமுடையவர். தனது நண்பர்கள்

மற்றும் தன்னைச் சார்ந்தோருக்கு நேரும் இடர்களை தனக்கு நேர்ந்தவையாகக் கருதும் இயல்பு கொண்டவர். அனைவருக்கும் உதவும் சுபாவம் உடையவர். சிலசமயம் உரத்துப் பேசினாலும் அப்பேச்சில் கடும் சொற்கள் ஒருபோதும் பிரயோகிக்கப் படுவதில்லை. பிறரை ஒருபோதும் மனம்நோக பேசமாட்டார்.

திருமதி திலவதி தர்மராசா அவர்கள் 2005ம் ஆண்டு இயற்கையெய்திய பின்னர் இவரிடமிருந்த மிடுக்கு சற்றுத் தளரத்தொடங்கியது. எனினும் தனது துணைவியாரின் ஒவ்வோர் ஆண்டு நினைவாகவும் பல தர்மகாரியங்களை செய்வதில் இவர் தவறுவதில்லை. கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தை விரிவாக்கும் நோக்கில் சட்ட உசாத்துணைப் பிரிவொன்றினை அமைப்பித்து அதற்கு வேண்டிய அநேக சட்ட நூல்களை தனது சொந்தச்செலவில் அன்பளிப்புச் செய்ததன் மூலம் சட்ட மாணவர்களுக்கு இருந்த பாரிய குறையொன்றினை நிவர்த்தி செய்தார். அத்தோடு மருத்துவம் மற்றும் பயன்மிக்க வேறுபல நூல்களையும் பதிப்பித்து இலவசமாக விநியோகித்தார்.

அளவுகடந்த நன்றியுணர்வும் குருபக்தியும் மிகுந்த தர்மராசா அவர்கள், தனது ஆசான்களாயிருந்து மறைந்த சட்டவாதி எஸ். ஆர். கனகநாயகம் மற்றும் என். ரி. சிவஞானம் ஆகியோரை நினைவுகூர்ந்து விழா எடுத்ததுடன் அவர்களது

உருவப்படங்களையும் கொழும்புத் தமிழ்ச் சங்க கட்டடத்தில் திரைநீக்கம் செய்து வைத்துள்ளமை பாராட்டுக்குரியது. இவருடைய பொதுத்தொண்டு களையும் நன்றியுடைமையையும் நன்கவதானித்த பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்கள் இவரை "*தருமராசா*" என்றும், பேராசிரியர் சபா. ஜெயராஜா இவரை "*வள்ளல்*" என்றும் வர்ணித்தனர்.

விருந்தோம்பலில் சிறந்து விளங்கிய தனது பாரியாரின் குணாதிசயங்களை நினைவூட்டும் வகையில் அடிக்கடி விருந்தோம்பல் நிகழ்வுகளை தனது இல்லத்தில் நடாத்தி வருகின்றார்.

தேகாரோக்கியமும் நீண்ட ஆயுளும் பெற்று அவர் தனது பணியை மேலும் தொடரவேண்டுமென, அவரது ஐம்பது ஆண்டு சட்டப்பணி பூர்த்தியாகும் இத்தருணத்தில் பிரார்த்திக்கின்றேன்.

தினக்குரல்
An Independent Daily Voice in Tamil

VIRAKESARI ONLINE
வீரகேசரி
WWW.VIRAKESARI.LK

*05. 01. 2014 திகதி பிரசுரிக்கப்பட்டது.*

# "கம்யூனிசத்தில்" திளைத்திருந்த சக்தியை உச்சரிக்கும் க.மு.தர்மராசா

**க.வி.விக்னேஸ்வரன்**

**ஓய்வுநிலைபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர்**

**தி**ரு. க. மு. தர்மராசா அவர்கள் தமது தொழிலில் ஐம்பது வருடகாலம் பூர்த்தியடைந் ததையிட்டு மன மகிழ்ச்சி அடைகிறேன். 2014ம் ஆண்டு நொவெம்பர் மாதத்தில் சட்டத் துறையில் நான் நுழைந்து ஐம்பது வருடங்கள் பூர்த்தி யடைகின்றன.

சிலருக்கு சில விடயங்கள் படிக்காமலேயே புலப்படும். அதற்குக் காரணம் அவர்கள் அதற்குரிய படிப்பை, அறிவை சென்ற பிறவியிலேயே பெற்றுவிட்டார்கள் என்பதால் தான் என்று கூறுவார்கள் மகான்கள். இதைப் பலர் ஏற்க மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் மிகச் சிறிய வயதில் சிறு பிள்ளைகள் சிலர் அதிசயிக்கத்தக்க வகையில் நடந்து கொள்கின்றார்களே! அதற்கான காரணம் என்ன? மரபணுக்களில் இருந்து வருவதாக விஞ்ஞானிகள் கூறுவார்கள். ஆனால்

அச்சிறுவர்களின் முன்னையோர் வாழ்க்கையைப் பார்த்தால் அப்படி எதுவுமே அதிசயிக்கத் தக்க வகையில் அவர்கள் வாழ்ந்து கொள்ளவில்லை என்பது தெரியவரும். அப்படியானால் சில குழந்தைகளின் அதிவிசேட தகைமைகளுக்குக் காரணம் என்ன? முன்னைய பிறவிகளில் அவர்கள் பெற்ற தகைமையே காரணம் என்று கூறுவதை முழுமையாக மறுக்க முடியாதுள்ளது.

திரு. தர்மராசா அவர்களிடம் கேட்டால் அதுதான் சக்தி என்பார். கம்யூனிசத்தில் திளைத்திருந்த அவர் "சக்தி" என்று கூறும்போது அது மதங்களுக்கு அப்பாற்பட்டு மின்சாரம் போல் எங்கும் நிறைந்திருக்கும் ஒரு விவரிக்க முடியாத சக்தியையே அவர் குறிப்பிடுகிறார் என்று கொள்ளலாம்.

போனபிறவியோ அல்லது அந்த சக்தியோ எதுவாக இருப்பினும் திரு. தர்மராசாவிற்கு இயற்கையிலேயே சட்ட சம்பந்தமான ஒரு பார்வையை, நோக்கை, தகைமையை, ஒரு இயற்கையான மனப்போக்கை அது வழங்கியுள்ளது.

மிகப் பொருத்தமாக கனேடிய நாட்டு சட்டத்தரணி றோச் என்பலர் திரு. தர்மராசா அவர்களை "an idea man" என்று ஆங்கிலத்தில் அழைத்திருந்தார். 'கருத்துக்கள் வழங்கும் மனிதர்' என்று அதைத் தமிழில் மொழி பெயர்த்து விடலாம். ஆனால் அந்த ஆங்கிலச் சொற்றொடர்தான் அவருடைய குணாதிசயங்களைத் தெட்டத்தெளிவாக எடுத்தியம்புகின்றது. சட்டத்தில் எந்தக் கேள்வி எழுந்தாலும்

அவர் மூளை கணனி வேகத்தில் வேலைசெய்யும். இப்படி இருக்குமா, அப்படி இருக்குமா அல்லது ஏன் இப்படி இருக்கக் கூடாது என்றெல்லாம் அவர் மூளை சிந்தித்துச் செயலாற்றி சட்டமுறைப்படி ஏற்கக் கூடிய சரியான பதிலை அல்லது அதற்கு அண்மையதான ஒரு பதிலைக்கண்டுவிடும்.

அவர் வாழ்க்கையை உன்னிப்பாகக் கவனிக்கும் ஒருவர். பல தலைசிறந்த சட்டத்தரணிகளுடன் பழகி அவர்களின் எண்ணக் கோர்வைகளைப் பக்கத்தில் இருந்து கிரகித்துக் கொண்டே எது எவ்வாறு அமைய வேண்டும் என்று சட்டரீதியாகப் பதிலிறுக்கும் பக்குவம் கொண்டவர் அவர்.

நான் 2004ம் ஆண்டு இளைப்பாறிய பின்னர் தான் அவருடன் நெருங்கிப் பழக முடிந்தது. அதற்கு முன்னர் அவர் பல சட்டத்தரணிகளுக்கு சட்ட அனுசரணையாளராகக் கடமையாற்றி வந்ததை அறிந்திருந்தேன். என்னுடன் அவர் இதுவரை பழகி வந்த நாட்களில் எந்த ஒரு விடயத்திலும் அவர் முறையாகச் சிந்தித்து அறிவுரை வழங்கும் அனுபவத்தையும் ஆற்றலையும் பெற்றுள்ளார் என்பதைத் தெரிந்துகொண்டேன்.

அவரை வழிநடத்தும் அந்தச் சக்தியானது அவருக்கு நீண்ட ஆயுளையும், திடகாத்திரமான உடலையும் உள்ளத்தையும், நோயற்ற வாழ்வையும் வழங்க வேண்டி நிற்கின்றேன்.

**சுடர் ஒளி**

*12. 1. 2014 திகதி பிரசுரிக்கப்பட்டது*

## "பொன்விழாக்காணும் க.மு.தர்மராசாவின் சேவையைப் பாராட்டிய வாழ்த்துரைகள்"

**சி.வி.விக்னேஸ்வரன்**
**வடமாகாண முதலமைச்சர்**

திரு. க. மு. தர்மராசா அவர்கள் தமது தொழிலில் ஐம்பது வருடகாலம் பூர்த்தியடைந்ததையிட்டு மன மகிழ்ச்சி அடைகிறேன். 2014ம் ஆண்டு நொவெம்பர் மாதத்தில் சட்டத்துறையில் நான் நுழைந்து ஐம்பது வருடங்கள் பூர்த்தியடைகின்றன.

சிலருக்கு சில விடயங்கள் படிக்காமலேயே புலப்படும். அதற்குக் காரணம் அவர்கள் அதற்குரிய படிப்பை, அறிவை சென்ற பிறவியிலேயே பெற்றுவிட்டார்கள் என்பதால் தான் என்று கூறுவார்கள் மகான்கள். இதைப் பலர் ஏற்க மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் மிகச் சிறிய வயதில் சிறுபிள்ளைகள் சிலர் அதிசயிக்கத்தக்க வகையில் நடந்து கொள்கின்றார்களே! அதற்கான காரணம் என்ன? மரபணுக்களில் இருந்து வருவதாக விஞ்ஞானிகள் கூறுவார்கள். ஆனால் அச்சிறுவர்களின் முன்னையோர்

வாழ்க்கையைப் பார்த்தால் அப்படி எதுவுமே அதிசயிக்கத் தக்க வகையில் அவர்கள் வாழ்ந்து கொள்ளவில்லை என்பது தெரியவரும். அப்படியானால் சில குழந்தைகளின் அதிவிசேட தகைமைகளுக்குக் காரணம் என்ன? முன்னைய பிறவிகளில் அவர்கள் பெற்ற தகைமையே காரணம் என்று கூறுவதை முழுமையாக மறுக்க முடியாதுள்ளது.

திரு. தர்மராசா அவர்களிடம் கேட்டால் அதுதான் சக்தி என்பார். கம்யூனிசத்தில் திளைத்திருந்த அவர் "சக்தி" என்று கூறும்போது அது மதங்களுக்கு அப்பாற்பட்டு மின்சாரம் போல் எங்கும் நிறைந்திருக்கும் ஒரு விவரிக்க முடியாத சக்தியையே அவர் குறிப்பிடுகிறார் என்று கொள்ளலாம்.

போனபிறவியோ அல்லது அந்த சக்தியோ எதுவாக இருப்பினும் திரு. தர்மராசாவிற்கு இயற்கையிலேயே சட்ட சம்பந்தமான ஒரு பார்வையை, நோக்கை, தகைமையை, ஒரு இயற்கையான மனப்போக்கை அது வழங்கியுள்ளது.

மிகப் பொருத்தமாக கனேடிய நாட்டு சட்டத்தரணி றோச் என்பலர் திரு. தர்மராசா அவர்களை "an idea man" என்று ஆங்கிலத்தில் அழைத்திருந்தார். 'கருத்துக்கள் வழங்கும் மனிதர்' என்று அதைத் தமிழில் மொழி பெயர்த்து விடலாம். ஆனால் அந்த ஆங்கிலச் சொற்றொடர்தான் அவருடைய குணாதிசயங்களைத் தெட்டத்தெளிவாக எடுத்தியம்புகின்றது. சட்டத்தில் எந்தக் கேள்வி எழுந்தாலும் அவர் மூளை கணனி வேகத்தில் வேலைசெய்யும். இப்படி

இருக்குமா, அப்படி இருக்குமா அல்லது ஏன் இப்படி இருக்கக் கூடாது என்றெல்லாம் அவர் மூளை சிந்தித்துச் செயலாற்றி சட்டமுறைப்படி ஏற்கக் கூடிய சரியான பதிலை அல்லது அதற்கு அண்மையதான ஒரு பதிலைக்கண்டுவிடும்.

அவர் வாழ்க்கையை உன்னிப்பாகக் கவனிக்கும் ஒருவர். பல தலைசிறந்த சட்டத்தரணிகளுடன் பழகி அவர்களின் எண்ணக் கோர்வைகளைப் பக்கத்தில் இருந்து கிரகித்துக் கொண்டே எது எவ்வாறு அமைய வேண்டும் என்று சட்டரீதியாகப் பதிலிறுக்கும் பக்குவம் கொண்டவர் அவர்.

நான் 2004ம் ஆண்டு இளைப்பாறிய பின்னர் தான் அவருடன் நெருங்கிப் பழக முடிந்தது. அதற்கு முன்னர் அவர் பல சட்டத் தரணிகளுக்கு சட்ட அனுசரணையாளராகக் கடமையாற்றி வந்ததை அறிந்திருந்தேன். என்னுடன் அவர் இதுவரை பழகி வந்த நாட்களில் எந்த ஒரு விடயத்திலும் அவர் முறையாகச் சிந்தித்து அறிவுரை வழங்கும் அனுபவத்தையும் ஆற்றலையும் பெற்றுள்ளார் என்பதைத் தெரிந்துகொண்டேன்.

**திருமதி. வசந்தா வயித்தியநாதன்** (14.11.2008)

"உண்மையாகவே நன்றி கூறுவதென்பது பேசுவதல்ல. நன்றி என்பது நினைப்பதற்குரியது. அதற்கு இந்த விழா ஒரு எடுத்துக்காட்டு. ஒரு சட்டமாமேதை உட்பட இரண்டு பெரிய சட்டவறிஞர் உட்பட, ஒரு கல்விமான் பற்றியும் காலம் கடந்து போற்றுவதற்கும் காலம் கடந்து நினைப்பதற்கும்

ஒரு வாய்ப்பு இன்று கிடைத்துள்ளது. அது தான் நன்றி நினைதல் என்பது. பலர் தங்களுடைய ஏற்றத்துக்கும் ஊற்றத்துக்கும் காரணமாயிருந்தவர்கள் யார் என்று இன்று நினைக்கிறார்களா? நன்றி நினைவு கூறுபவர் யார்? நன்றி மறவாதோர் இன்று யாருமில்லை என்று சொல்லுமளவிற்கு அருகிவிட்டனர். நன்றி செலுத்துதல் என்ற மகுடத்திலான இன்றைய வைபவம் இளஞ் சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்லும் ஒழுக்க விழுமியமாகும். நன்றி உணர்வு குன்றிவரும் இந்நாட்களிலே நன்றிக்கடன் செலுத்துவதற்காக ஒரு விழாவை எடுத்து முன்மாதிரியாகக் காட்டியமைக்காக தர்மராசா அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அத்துடன் சட்டக்கல்லூரி செல்லாது சட்டம் பயின்றமை பற்றி தர்மராசா அவர்கள் சொன்னார்கள். அவர் உண்மையாகவே சட்டநுணுக்கங்களை நன்கறிந்தவர் என்பது அவரது உரையிலிருந்து புலனாகிறது.

**பேராசிரியர் சபா ஜெயராஜா (14.11.2008)**

"வளர்ந்து வருகின்ற தமிழ் வாசகர்களுக்கு திரு. தர்மராசா அவர்கள் காலத்தின் தேவையறிந்து பயனுள்ள தமிழாக்க நூலை (14.11.2008) இன்று வெளியிடுகின்றார்.

தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நான் அவருக்கு சிறப்பாக நன்றியறிதலை தெரிவிக்க வேண்டியது. ஏனெனில் யாழ்ப் பாணத்தில் எங்களுடைய சட்டமாணவர்கள் உயர்கல்வியை யாழ்ப்பாணத்தில் தொடர முடியாத நிலையில் கொழும்பிலே

அவர்கள் தொடர வேண்டுமென்று, யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் என்னுடன் கதைத்த போது அவர்களுக்குப் ஒரு பொருத்தமான இடத்தைத்தேடி எங்களுடைய தமிழ்ச் சங்கத்தில் இரண்டாவது மாடியில் யாழ்ப்பாண சட்டபீட விரிவுரைகளை நடாத்தக் கேட்டார். பல்கலைக்கழக மாணவர்களுக்கு கல்வியைப் பயிலுவதற்கும் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கும் நூலகம் ஒரு முக்கிய காரணமாகும். சட்டத்துறையை நிலையை தரமுயர்த்த வேண்டுமென்ற பேருள்ளத்துடன் அவர்கள் மனமுவந்து இலட்சக்கணக்கான பணத்தை செலவழித்து சட்டத் துறையில் அனேகமான நூல்களை இங்கு எடுத்துத் தந்துள்ளார். மாணவர்களுக்கு தங்களுக்குத் தேவையான சட்ட நூல்கள் தேவையெனக் கேட்டதைத் தொடர்ந்து ஒரு மாத காலத்துக்குள் அந்நூல்களை எடுத்துத் தந்தார். இன்றும் எடுத்துத் தந்துகொண்டிருக்கின்றார். இந்தவகையில் அவரது பணிக்காக தமிழ்ச் சங்க சார்பில் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தமிழ்ச் சங்கத்திற்கு இன்னும் வேறுபல நூல்களை சேர்க்க வேண்டியுள்ளது என்று திரு. தர்மராசா அவர்களை கேட்ட போது அவர் அதற்குரிய நூல்களை பெற்றுத் தந்திருக் கின்றார். எங்களுடைய நூலகம் கொழும்பிலிருக்கின்ற சிறந்த நூலகம் மட்டுமல்ல இலங்கையிலும் ஒரு சிறந்த நூலகமாகவுள்ளது. நாங்கள் சேகரித்து வைத்திருக்கின்ற தமிழ் நூல்கள் கிடைக்காதனவாகும். அந்த வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் இன்றும் எங்களுக்கு கைகொடுத்துக் கொண்டிருக்கின்றார் திரு. தர்மராசா அவர்கள். மேலும் மேலும்

எங்கள் நூலகம் வளரவேண்டுமென்று வள்ளல் தர்மராசா அவர்களின் ஒத்துழைப்புகளும் நல்லாசிகளும் எங்களுக்கு கிடைக்குமென்று எதிர்பார்க்கின்றேன்.

**க. கோபாலபிள்ளை** -

நான் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் சேவையில் இணைந்து யாழ் மேல் நீதிமன்றத்தில் நியமனம் பெற்ற முதலாவது நாள் 1974.03.20ந் திகதியன்று. யாழ் மேல் நீதிமன்றத்தில் சுருக்கெழுத்தாளர் அறையிலிருந்து வெளியே வந்தநான் நீதிமன்றச் சூழலை அவதானித்துக் கொண்டிருந்த போது நீதிமன்ற வளாகத்துக்குள் வேகமாக ஓர் ஈருளியில் அரைக்கைச் சட்டையும் வேஷ்டியும் அணிந்துவந்த மனிதர் வந்த அதே வேகத்தில் ஈருளியை விட்டிறங்கி ஓர் ஓரமாகவிருந்த வாகை மரத்தில் அதனைச் சாய்த்து வைத்துவிட்டு அது சரிந்து விழுந்துவிடுமோ என்ற சிந்தனைகூட இல்லாமல் மாவட்ட நீதிமன்ற பதிவேட்டு அறையை நோக்கிச் செல்கிறார். அவர் ஓடுகிறாரா நடக்கிறாரா என்று தீர்மானிக்க முடியாத ஓர் இரண்டும் கெட்டான் நிலை அது" என்பதை அவதானித்தேன்.

அந்த மனிதர் வேறு யாருமல்ல. சட்டத்துறை சார்ந்த பணியில் 2014.01.01ந் திகதி தனது அரைநூற்றாண்டு காலத்தை பூர்த்திசெய்துவிட்ட பூரிப்போடு அவரது நண்பர்கள் அறிந்தவர்கள் தெரிந்தவர்களின் வாழ்த்துமழையில் நனைந்து கொண்டிருக்கும் நண்பர் திரு. க. மு. தர்மராசா அவர்கள் தான்.

அவரது ஈருளி நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தப்படும் போதெல்லாம் அது பூட்டப்படுவதில்லை என்பதையும் அவர் எந்த நேரமும் எறும்புபோன்று மாறாது ஓடிக்கொண்டிருப்பவர் என்பதையும் எனது யாழ் நீதிமன்ற பணிக்காலத்தில் நேரடியாகவே தெரிந்து கொண்டேன். அவரது ஈருளி பூட்டப்படாத போதும் அது யாரும் களவாடியதில்லை. ஆனால் அங்கு பணிபுரியும் சிற்றூழியர் சிலர் அதனைத் தமது தேவையின் பொருட்டு அவசரமாக எடுத்துச் சென்றுவிடுவதுண்டு. தனது பணிகளை முடித்துத் திரும்பும் அவர், சைக்கிளை ஆர் கொண்டு போனது என்று தான் கேட்பாரே தவிர, யாரோ களவாடிவிட்டான் என என்றுமே நினைத்ததுமில்லை, பதற்றமடைந்ததுமில்லை. அவர் எதிர்பார்த்தது போலவே சிறிது நேரத்தில் அவரது கைக்கு அவரது ஈருருளி கிடைத்துவிடும். அது குறித்து அவர்களிடம் அவர் சினந்து கொண்டதுமில்லை.

திரு. தர்மராசா அவர்கள் சட்டக்கல்லூரி சென்று சட்டக் கல்வியைக் கற்காத ஒருவராக இருந்தபோதும், பட்டறிவினால் குடியியல் சட்டத்தில் ஆழ்ந்த புலமைபெற்ற ஒருவராக அவர் விளங்கினார். மன்றில் வாதாடுவதற்கான அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகைமையைக் கொண்டிராதபோதும் அவர் தயாரித்துக் கோவையிட்ட பல வழக்குகளை நியாயவாதிகள் மன்றின் முன் கொண்டு சென்று வாதாடுவதை நான் பலமுறை கண்டுள்ளேன்.

இன்றுங்கூட பல இளம் நியாயவாதிகள் தேசவழமைச் சட்டம் தொடர்பாகவும், காணி உறுதிகள் எழுதும்போது தமக்கு ஏற்படும் சந்தேகங்கள் தொடர்பாகவும், வழக்குகளைத்

தயாரித்தல் தொடர்பாகவும் அவரிடம் ஆலோசனைகள் பெற்றுச் செல்வதை நான் நேரிடையாகவே கண்டுள்ளேன். இவை, குடியியல் சட்டம் தொடர்பில் ஆற்றலும், அறிவும் அனுபவ முதிர்ச்சியும் அவரிடம் மிகுந்திருப்பதற்குச் சான்றாக அமைகின்றன.

ஒருவருடைய வழக்குத் தொடர்பான பணிகளைப் பொறுப்பேற்றால் அது தொடர்பான சட்டநூல்களை ஆராய்ந்து பிராதுகளைத் தயாரித்து, கோவைகளைப் பூர்த்தி செய்யும் வரை இரவு, பகல் பாராது பசி நோக்காது, யாழ் பிரதான வீதியில் அந்நாளில் அமைந்திருந்த 'மில்க் பார்' எனும் உணவகத்தில் அடிக்கடி பருகும் தேனீருடனும் இடையிடை கடித்துக்கொள்ளும் வடையுடனும் கடமையே கண்ணாயிருந்து செயற்படுவது அவரது அர்ப்பணிப்பு நிறைந்த கடமையுணர்வுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

நாற்பது ஆண்டு காலமாக தலைநகரத் தமிழர்களால் மறக்கப்பட்டாலும் நாட்டின் பல பாகங்களிலும் கல்விக் கூடங்களை அமைத்து, ஏழை, எளிய பிள்ளைகளின் கல்விக்கண் திறக்க வழிசெய்த இந்துபோட் இராசரெத்தினம் அவர்களை நினைவுகூரு முகமாக, கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் விழாவெடுத்து, உயர்நீதிமன்றத்தின் புகழ்பூத்த ஓய்வுநிலை நீதியரசர் மாண்புமிகு சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள் மூலம் நினைவுரை நிகழ்த்தச் செய்து அன்னாரின் பணிக்குப் பெருமை சேர்த்தார்.

தினகரன்

*03. 1. 2014 திகதி பிரசுரிக்கப்பட்டது.*

# சட்டத்துறையில் பொன்விழா காணும் தமிழ் இலக்கிய ஆர்வலர் தர்மராசா

- சந்திரகாந்தா முருகானந்தன்

**நா**டறிந்த பிரபல சட்டத்தரணி க. மு. தர்மராசா அவர்களுக்கு இது பொன் விழா ஆண்டு. தனது சட்ட அறிவுத்திறனால் பலருக்கு சிறந்த ஆலோசனைகளை வழங்கிய இவர், தனது சட்ட நுணுக்கங்களுக்காக புகழ்பெற்றவர். வருமானத்தை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாமல் சாதாரண மக்களுக்கும் சட்டத்துறையில் தன்னாலான பேருதவிகளைச் செய்தவர் இவர். தர்மராசா மனித நேயம் மிக்கவர்.

இலக்கியம் என்பது தமிழ்ப் பேராசிரியர்களுக்கும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் என்றிருந்த நிலை மாறி இன்று மருத்துவ அறிவியல் மற்றும் சட்ட பொருளாதார துறை சார்ந்தவர்களும் இலக்கியத்திறன் மிக்கவர்களாக இருக்கிறார்கள்.

தர்மராசா போன்ற ஓய்வொழிச்சலின்றிப் பணிபுரியும் அறிவாளிகள் இலக்கியத்தில் அதிக அக்கறை செலுத்தி

செயற்படுவது பாராட்டத்தக்கது. தர்மராசா சிறந்த ஒரு வாசகராக, இலக்கிய கலாரசனை மிக்கவராக இலக்கிய அமைப்புகளுடன் தொடர்புடையவராக இருந்து வருகிறார்.

இலக்கியவாதிகளை கைகொடுத்துத் தூக்கிவிடுவதிலும் உற்சாகப்படுத்துவதிலும் முன்நிற்பவர். தமிழ் இலக்கி யத்தில் மாத்திரமின்றி பிறமொழி இலக்கியங்களுடனும் பரிச்சயமுள்ள வராக இருப்பது சிறப்பம்சம். தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த வரை பண்டைய இலக்கியங்களிலும் நவீன தமிழிலக் கியத்திலும் ஈடுபாடு மிக்கவராகவும் தன் கருத்துக் களைச் சொல்லும் ஆற்றல் மிக்கவராகவும் இருக்கிறார்.

கொழும்பு தமிழ்ச் சங்க நூலகத்திற்கு பல பெறுமதிமிக்க அரிய சட்ட நூல்களை வழங்கியுள்ள இவர், தமிழ்ச் சங்கத்தில் நூல் வெளியீடுகளிலும் இலக்கிய நிகழ்வு களிலும் பங்கு கொண்டு இலக்கியவாதிகளுக்கு உதவியும் புரிகிறார். நூல் வெளியீடுகளில் சிறப்புப் பிரதிகள் பெற்று எழுத்தாளர்களை உற்சாக மூட்டுவார்.

இலக்கியவாதிகளுடனும், ஊடகத்துறை சார்ந்தோரு டனும் நல்லுறவைப் பேணி வரும் இவர், முற்போக்கு சிந்தனை மிக்கவர். சட்டத்துறையில் பொன்விழா ஆண்டில் கால் பதிக்கும் இவரை வாழ்த்துவோம்.

தினகரன்

*2014. 1. 12ந் திகதி வெளியானது*

# "கம்யூனிசத்தில்" திளைத்திருந்த சக்தியை உச்சரிக்கும் பொன்விழாகாணும் க.மு.தர்மராசா

**கவி.விக்னேஸ்வரன்**

**ஓய்வுநிலைபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர்**

திரு. க. மு. தர்மராசா அவர்கள் தமது தொழிலில் ஐம்பது வருடகாலம் பூர்த்தியடைந்ததையிட்டு மன மகிழ்ச்சி அடைகிறேன். 2014ம் ஆண்டு நொவெம்பர் மாதத்தில் சட்டத்துறையில் நான் நுழைந்து ஐம்பது வருடங்கள் பூர்த்தியடைகின்றன.

சிலருக்கு சில விடயங்கள் படிக்காமலேயே புலப்படும். அதற்குக் காரணம் அவர்கள் அதற்குரிய படிப்பை, அறிவை சென்ற பிறவியிலேயே பெற்றுவிட்டார்கள் என்பதால் தான் என்று கூறுவார்கள் மகான்கள். இதைப் பலர் ஏற்க மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் மிகச் சிறிய வயதில் சிறுபிள்ளைகள் சிலர் அதிசயிக்கத்தக்க வகையில் நடந்து கொள்கின்றார்களே! அதற்கான காரணம்

என்ன? மரபணுக்களில் இருந்து வருவதாக விஞ்ஞானிகள் கூறுவார்கள். ஆனால் அச்சிறுவர்களின் முன்னையோர் வாழ்க்கையைப் பார்த்தால் அப்படி எதுவுமே அதிசயிக்கத் தக்க வகையில் அவர்கள் வாழ்ந்து கொள்ளவில்லை என்பது தெரியவரும். அப்படியானால் சில குழந்தைகளின் அதிவிசேட தகைமைகளுக்குக் காரணம் என்ன? முன்னைய பிறவிகளில் அவர்கள் பெற்ற தகைமையே காரணம் என்று கூறுவதை முழுமையாக மறுக்க முடியாதுள்ளது. திரு. தர்மராசா அவர்களிடம் கேட்டால் அதுதான் சக்தி என்பார்.

கம்யூனிசத்தில் திளைத்திருந்த அவர் "சக்தி" என்று கூறும்போது அது மதங்களுக்கு அப்பாற்பட்டு மின்சாரம் போல் எங்கும் நிறைந்திருக்கும் ஒரு விவரிக்க முடியாத சக்தியையே அவர் குறிப்பிடுகிறார் என்று கொள்ளலாம்.

போனபிறவியோ அல்லது அந்த சக்தியோ எதுவாக இருப்பினும் திரு. தர்மராசாவிற்கு இயற்கையிலேயே சட்ட சம்பந்தமான ஒரு பார்வையை, நோக்கை, தகைமையை, ஒரு இயற்கையான மனப்போக்கை அது வழங்கியுள்ளது.

மிகப் பொருத்தமாக கனேடிய நாட்டு சட்டத்தரணி றோச் என்பலர் திரு. தர்மராசா அவர்களை "an idea man" என்று ஆங்கிலத்தில் அழைத்திருந்தார். 'கருத்துக்கள் வழங்கும் மனிதர்' என்று அதைத் தமிழில் மொழி பெயர்த்து விடலாம். ஆனால் அந்த ஆங்கிலச் சொற்றொடர் தான்

அவருடைய குணாதிசயங்களைத் தெட்டத்தெளிவாக எடுத்தியம்புகின்றது. சட்டத்தில் எந்தக் கேள்வி எழுந்தாலும் அவர் மூளை கணனி வேகத்தில் வேலைசெய்யும். இப்படி இருக்குமா, அப்படி இருக்குமா அல்லது ஏன் இப்படி இருக்கக் கூடாது என்றெல்லாம் அவர் மூளை சிந்தித்துச் செயலாற்றி சட்டமுறைப்படி ஏற்கக் கூடிய சரியான பதிலை அல்லது அதற்கு அண்மையதான ஒரு பதிலைக்கண்டுவிடும்.

அவர் வாழ்க்கையை உன்னிப்பாகக் கவனிக்கும் ஒருவர். பல தலைசிறந்த சட்டத்தரணிகளுடன் பழகி அவர்களின் எண்ணக் கோர்வைகளைப் பக்கத்தில் இருந்து கிரகித்துக் கொண்டே எது எவ்வாறு அமைய வேண்டும் என்று சட்டரீதியாகப் பதிலிறுக்கும் பக்குவம் கொண்டவர் அவர்.

நான் 2004ம் ஆண்டு இளைப்பாறிய பின்னர் தான் அவருடன் நெருங்கிப் பழக முடிந்தது. அதற்கு முன்னர் அவர் பல சட்டத்தரணிகளுக்கு சட்ட அனுசரணையாளராகக் கடமையாற்றி வந்ததை அறிந்திருந்தேன். என்னுடன் அவர் இதுவரை பழகி வந்த நாட்களில் எந்த ஒரு விடயத்திலும் அவர் முறையாகச் சிந்தித்து அறிவுரை வழங்கும் அனுபவத்தையும் ஆற்றலையும் பெற்றுள்ளார் என்பதைத் தெரிந்துகொண்டேன்.

அவரை வழிநடத்தும் அந்தச் சக்தியானது அவருக்கு நீண்ட ஆயுளையும், திடகாத்திரமான உடலையும் உள்ளத்தையும், நோயற்ற வாழ்வையும் வழங்க வேண்டி நிற்கின்றேன்.

# நன்றிக்கடன் என்ற தலைப்பில் சிறப்புரை

திருமதி.வசந்தா வைத்தியநாதன்
அருள்மொழியரசி, கலாபூஷணம், வித்துவாட்டி

"உண்மையாகவே நன்றி கூறுவதென்பது பேசுவதல்ல. நன்றி என்பது நினைப்பதற்குரியது. அதற்கு இந்த விழா ஒரு எடுத்துக்காட்டு. ஒரு சட்டமாமேதை உட்பட இரண்டு பெரிய சட்டவறிஞர் உட்பட, ஒரு கல்விமான் பற்றியும் காலம் கடந்து போற்றுவதற்கும் காலம் கடந்து நினைப்பதற்கும் ஒரு வாய்ப்பு இன்று கிடைத்துள்ளது. அது தான் நன்றி நினைதல் என்பது. பலர் தங்களுடைய ஏற்றத்துக்கும் ஊற்றத்துக்கும் காரணமாயிருந்தவர்கள் யார் என்று இன்று நினைக்கிறார்களா? நன்றி நினைவு கூறுபவர் யார்? நன்றி மறவாதோர் இன்று யாருமில்லை என்று சொல்லுமளவிற்கு அருகிவிட்டனர். நன்றி செலுத்துதல் என்ற மகுடத்திலான இன்றைய வைபவம் இளஞ் சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்லும் ஒழுக்க விழுமியமாகும். நன்றி உணர்வு குன்றிவரும் இந்நாட்களிலே நன்றிக்கடன் செலுத்துவதற்காக ஒரு விழாவை எடுத்து முன்மாதிரியாகக் காட்டியமைக்காக தர்மராசா அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அத்துடன் சட்டக்கல்லூரி செல்லாது சட்டம் பயின்றமை பற்றி தர்மராசா அவர்கள் சொன்னார்கள். அவர் உண்மையாகவே சட்டநுணுக்கங்களை நன்கறிந்தவர் என்பது அவரது உரையிலிருந்து புலனாகிறது.

VIRAKESARI ONLINE
வீரகேசரி
WWW.VIRAKESARI.LK

# பொன்விழா காணும் க.மு.தர்மராசா

**க.மு.தர்மராசா தமது தொழிலில் 50 வருடங்களைப் பூர்த்தி செய்தமையை வடமாகாண முதலமைச்சரும் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் பாராட்டி ஓர் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். அதில் அவர் தெரிவித்துள்ளதாவது.**

திரு. க. மு. தர்மராசா அவர்கள் தமது தொழிலில் ஐம்பது வருடகாலம் பூர்த்தியடைந்ததையிட்டு மன மகிழ்ச்சி அடைகிறேன்.

சிலருக்கு சில விடயங்கள் படிக்காமலேயே புலப்படும். அதற்குக் காரணம் அவர்கள் அதற்குரிய படிப்பை, அறிவை சென்ற பிறவியிலேயே பெற்றுவிட்டார்கள் என்பதால் தான் என்று கூறுவார்கள் மகான்கள். இதைப் பலர் ஏற்க மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் மிகச் சிறிய வயதில் சிறுபிள்ளைகள் சிலர் அதிசயிக்கத்தக்க வகையில் நடந்து கொள்கின்றார்களே! அதற்கான காரணம் என்ன? மரபணுக்களில் இருந்து வருவதாக விஞ்ஞானிகள் கூறுவார்கள். ஆனால் அச்சிறுவர்களின் முன்னையோர் வாழ்க்கையைப் பார்த்தால் அப்படி எதுவுமே அதிசயிக்கத் தக்க வகையில் வாழ்ந்திருக்க

வில்லை என்பது தெரியவரும். அப்படியானால் சில குழந்தைகளின் அதிவிசேட தகைமை களுக்குக் காரணம் என்ன? முன்னைய பிறவிகளில் அவர்கள் பெற்ற தகைமையே காரணம் என்று கூறுவதை முழுமையாக மறுக்க முடியாதுள்ளது.

திரு. தர்மராசா அவர்களிடம் கேட்டால் அதுதான் சக்தி என்பார்.

கம்யூனிசத்தில் திளைத்திருந்த அவர் "சக்தி" என்று கூறும்போது அது மதங்களுக்கு அப்பாற்பட்டு மின்சாரம் போல் எங்கும் நிறைந்திருக்கும் ஒரு விவரிக்க முடியாத சக்தியையே அவர் குறிப்பிடுகிறார் என்று கொள்ளலாம்.

போனபிறவியோ அல்லது அந்த சக்தியோ எதுவாக இருப்பினும் திரு. தர்மராசாவிற்கு இயற்கையிலேயே சட்ட சம்பந்தமான ஒரு பார்வையை, நோக்கை, தகைமையை, ஒரு இயற்கையான மனப்போக்கை அது வழங்கியுள்ளது.

மிகப் பொருத்தமாக கனேடிய நாட்டு சட்டத்தரணி றோச் என்பலர் திரு. தர்மராசா அவர்களை "an idea man" என்று ஆங்கிலத்தில் அழைத்திருந்தார். 'கருத்துக்கள் வழங்கும் மனிதர்' என்று அதைத் தமிழில் மொழி பெயர்த்து விடலாம். ஆனால் அந்த ஆங்கிலச் சொற்றொடர்தான் அவருடைய குணாதிசயங்களைத் தெட்டத்தெளிவாக எடுத்தியம்புகின்றது. சட்டத்தில் எந்தக் கேள்வி எழுந்தாலும்

அவர் மூளை கணனி வேகத்தில் வேலைசெய்யும். இப்படி இருக்குமா, அப்படி இருக்குமா அல்லது ஏன் இப்படி இருக்கக் கூடாது என்றெல்லாம் அவர் மூளை சிந்தித்துச் செயலாற்றி சட்டமுறைப்படி ஏற்கக் கூடிய சரியான பதிலை அல்லது அதற்கு அண்மையதான ஒரு பதிலைக்கண்டுவிடும்.

அவர் வாழ்க்கையை உன்னிப்பாகக் கவனிக்கும் ஒருவர். பல தலைசிறந்த சட்டத்தரணிகளுடன் பழகி அவர்களின் எண்ணக் கோர்வைகளைப் பக்கத்தில் இருந்து கிரகித்துக் கொண்டே எது எவ்வாறு அமைய வேண்டும் என்று சட்டரீதியாகப் பதிலிறுக்கும் பக்குவம் கொண்டவர் அவர்.

நான் 2004ம் ஆண்டு இளைப்பாறிய பின்னர் தான் அவருடன் நெருங்கிப் பழக முடிந்தது. அதற்கு முன்னர் அவர் பல சட்டத்தரணிகளுக்கு சட்ட அனுசரணையாளராகக் கடமையாற்றி வந்ததை அறிந்திருந்தேன். என்னுடன் அவர் இதுவரை பழகி வந்த நாட்களில் எந்த ஒரு விடயத்திலும் அவர் முறையாகச் சிந்தித்து அறிவுரை வழங்கும் அனுபவத்தையும் ஆற்றலையும் பெற்றுள்ளார் என்பதைத் தெரிந்துகொண்டேன்.

சுடர்ஒளி

சுடர்ஒளி பத்திரிகையில் 2014.01.01 இல் வெளியானது

## "உளமார வாழ்த்துகின்றோம் உன் பணியைப் போற்றுகின்றோம்"

**திரு. திருமதி. கோபாலபிள்ளை**

க.மு.தர்மராசா சட்டத்துறையில் கால்பதித்து 50 ஆண்டுகள் நிறைவடைவதையடுத்து இந்த ஆக்கம் பிரசுமாகிறது.

நீதிமுறை நெடும் பணியில்
நீண்டபெருங் காலமெனும்
தசாப்தம் ஐந்தினை நீ
தடையின்றித் தொட்டும் இன்றும்
தளராது அப்பணியைத்
தொடர்கின்ற இவ்வேளை
நண்பர்கள் நல்லவர்கள்
நாலுந் தெரிந்தவர்கள்
அன்பர்கள் அறிவார்ந்தோர்
ஆற்றல் மிகுந்தவர்கள்
மனதில் உறுதியோடு
மேலும் பல காலம்

நின்பணியை நீ தொடர
நெஞ்சார வாழ்த்துகின்ற
நன்நாளாம் இந்நாளில்
நாமும் இணைந்து உன்னை
நலமோடு நெடுங்காலம் நீடுழி
வாழ்கவென்று
உளமார வாழ்த்துகின்றோம்!
உன்பணியைப் போற்றுகின்றோம்!

சட்டத்துறைப் பணியில்
சாதனைகள் பல புரிந்த
உன் ஆசான், வழிகாட்டி
குருவென்று நீ ஏற்ற
சிவில் சட்டவல்லுநராம்
எஸ். ஆரின் பெயர் விளங்க
தலைநகரில் தமிழ் வளர்க்கும்
தமிழ்ச்சங்க நூலகத்தில்
சட்டத்துறை நூல்களுக்கோர்
பிரிவொன்றை அமைப்பதிலே
நீ புரிந்த பங்கு பணி
காலம் பல கடந்தும்
கல்மேல் எழுத்தாக
என்றென்றும் நிலைத்திருக்கும்
தமிழ்ச்சங்க வரலாற்றில்!
கல்விக் கண் திறக்க

கூடங்கள் பல நிறுவி
கடும் பணி செய்திடவே
இந்துபோட் அமைத்திட்ட
இராசரெத்தினத்தார்
சேவை நலன் பாராட்டி
தலைநகரில் அவர் நினைவை
மீண்டொருகால் நிலைநிறுத்த
தகைசான்ற பெருமகனார்
உயர்நீதிமன்றத்து
ஓய்வுநிலை நீதியாளர்
ஐயா விக்னேஸ்வரனின்
ஆய்ந்தறிந்த உரை கொண்டே
விழாவெடுத்து நீ புரிந்த
பெரும்பணியும் என்றும்
நீங்காது நிலைத்திருக்கும்
எம்மினத்தோர் நினைவகத்தில்!

உன் அனைத்துப் பணிகளிலும்
உறுதுணையாய் நின்றவராம்
உன்துணையாள் இழப்பு
உன்னை உலுக்கி எடுத்ததுண்மை
உனை என்றும் சூழ நிற்கும்
உன் நலனில் குறிகொண்ட
உண்மை அன்புநிலை
பயன்கருதா நண்பர் குழாம்

பயன்மிகு வாழ்க்கையொன்றின்
பாதையினைக் காட்டிநிற்க
பின்நாளில் மீண்டெழுந்தாய்
பிறர்க்குதவும் பெரும்பணியில்!

கவிதை, கட்டுரைகள்
கதைகள், நாடகங்கள்
காலத்தின் தேவையென
அடிப்படை மருத்துவம்சார்
ஆக்க முயற்சிகளை
நூலாக்கும் நற்பணியில்
நுழைந்துள்ள பல்லோரின்
புத்தாக்க முயற்சிகளின்
வெளியீட்டு நிகழ்வுகளில்
ஊக்குவிக்கும் பாங்கினிலே
உதவிகளோ பல புரிந்தாய்!

உயிர்க்கொல்லி நோயான
புற்றுநோய் பற்றியதோர்
ஆங்கில மொழியிலான
பயன்மிக்க நூலினையும்
முதியோரைப் பேணுமொரு
வழிகாட்டும் நூலான
ஆங்கில மொழிகொண்ட
அரியதோர் நூலினையும்

மனித நடத்தைகளை
ஆழமாய் ஆய்ந்துரைக்கும்
ஆங்கில மொழியமைந்த
அழகான நூலினையும்
இலகு தமிழ் நடையில்
மொழிமாற்றம் செய்திட்டு
அழகுறவே அச்சேற்றி
ஆண்டுகள் தோறும்
துணையாளின் நினைவாக
சீரான விழாவெடுத்து
இலாப நோக்கமின்றி
வெளியீடு செய்வதனே
நின்பணி என்றென்றும்
நித்தியமாய் நிலைத்திருக்கும்!

நன்றிக்கடன் என்றே
நல்லவற்றைச் செய்கின்றாய்
நல்லமனம் கொண்டதனால்
நல்லவர்கள் சுற்றி உள்ளார்
உளத்தூய்மை கொண்டதனால்
உன் உதவியாளர்கள்
கண்ணை இமை காப்பதுபோல்
கருத்தோடு பார்க்கின்றார்
சுயநலமே மிகு உலகில்
இவையாவும் புறநடையே

நீ செய்த நல்லவையே
இவற்றுக்காய் ஊற்றுக்கண்!

எடுத்த கருமமதை
எத்தகைய தடைவரினும்
அளுங்கொத்த பிடியோடு
நடத்தி முடிப்பதிலே
உனக்கில்லை இணையாரும்
மறுத்துரைக்கார் உனைஅறிந்தோர்!

மனதளவில் நீ இன்று
சோர்வுற்று இருந்தாலும்
மனதிற்கிசைந்தவற்றைப்
பேசுகின்ற வேளையிலும்
வழிகாட்டி நிற்றோரின்
நினைவுகளில் மிதக்கையிலும்
மனங்கொண்ட தலைவர்களின்
நினைவுகளை மீட்கையிலும்
இளமைப்பருவமதை
நீ எட்டி விடுகின்றாய்!

வரித்திட்ட தலைவர்களை
விமர்சிக்கும் பிறர்கண்டு
சீறிச் சிலிர்த்தெழுந்து
சன்னதம் ஆடுவதை

உனை அறிந்த நண்பர்கள்
நேராகக் கண்டதுண்டு!
பல பிள்ளை பெற்றவரும்
தனிமையிலே வாடுகின்றார்
பிள்ளைகளோ வெளிநாட்டில்
பெற்றவரோ தனிவாழ்க்கை
இது இன்று உள்ள நிலை
இதை மாற்ற மார்க்கமில்லை
தனிமை வெறுமை என்று
துன்பத்தை வளர்க்காமல்
யதார்த்தம் இதுவென்று
நாம் உணர்ந்துகொண்டார்
மனக்கவலை மாறும்
மகிழ்ச்சி அலை மீறும்!

நீ வரித்த நின் பணியை
நீ தொடர்ந்து செய்திடவே
நீடுழி வாழ்கவென
நிறைவாக வாழ்த்துகிறோம்.

தினகரன்

வாரமஞ்சரியில் 2014.1.26 அன்று வெளியானது.

# சட்டக்கல்லூரி செல்லாத சட்ட ஆலோசகரும் பிரசித்த நொத்தாரிசும் - க.மு.தர்மராசாவின் நினைவலைகள்

சட்டக் கல்லூரி செல்லாது சட்டத்தையும் சட்ட நுணுக்கங்களையும் பயின்ற பிரசித்த நொத்தாரிசும் சட்ட வல்லுனரும் உதவியாளருமான க.மு.தர்மராசா ஐந்து தசாப்தகாலம் சட்ட, சமய, சமூக நலன்களில் ஆற்றிய அளப்பரிய சேவைகள் எண்ணிலடங்காதவை. சட்டத்துறையில் அரை நூற்றாண்டு காலத்தை பூர்த்தி செய்துவிட்டு பூரிப்போடு இருந்த அவரின் வாழ்வை திரும்பிப் பார்க்கின்றோம்.

கொழும்பை வாழ்விடமாகக் கொண்ட அவரிடம் பிறந்தகத்தைப் பற்றி கேட்டேன் - யாழ் காரைநர் பாலாவோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவன் நான். என் தந்தையார் கந்தையா முருகேசு தாயார் வள்ளியம்மை. நான்கு சகோதரர்களுடன் பிறந்த நான், நான் தான் குடும்பத்தில் கடைசியும் குடும்பத்தின் கடைசி வாரிசும். மூத்த சகோதரர்கள் மூவரும் காலவோட்டத்தில் காலனுக்கு இரையாகிவிட்டார்கள்.

என்னுடைய ஆரம்ப கல்வி காரைநகர் களபூமி சுந்தர மூர்த்தி வித்தியாலயத்தில் ஐந்தாம் தரம் வரை கற்று பின் காரைநகர் இந்துக் கல்லூரியில் ஜீ.ஸி.ஈ. வரை கற்றேன். எனக்கு போதித்த ஆசிரியர்களில் என்.சபாரத்தினம் மாஸ்டரை மறக்க முடியாது. மாணவரின் மனப்பக்குவதிற் கேற்ற ஹாஸ்யத்துடன் கற்பிப்பதை கையாண்டவர். அவர் படிப்பித்த ஆங்கிலமும் தமிழும் மனத்திரையில் காட்சியாகப் பதிந்துவிடும். பேச்சுப் போட்டி, விவாதப்போட்டிகளில் என் பங்களிப்பு தவறாது இடம்பெறும். அத்துடன் கார்த்திகேசு தலைமை ஆசிரியரை மறக்க முடியாது. அதேபோன்று உதைப்பந்தாட்டப் போட்டிகளில் ஆரம்பத் தரத்திலிருந்து விளையாடியிருக்கின்றேன். காரைநகர் பள்ளி முதலாம் தரத்தில் உதைப்பந்தாட்ட கோல்ட் கீப்பராக உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு எதிராக விளையாடியது பசுமையான நினைவுகள்.

**தாங்கள் கால்பதித்த முதல் தொழில் எது?**

எனக்கு பாடசாலை காலத்திலிருந்து சட்ட விவாதங்கள் பிடிக்கும். பாடசாலைக்கு “கட்” அடித்துவிட்டு பள்ளிதோழர்கள் சினிமா பார்க்கப் போவார்கள். நான் நீதிமன்றில் நடக்கும் விவாதங்களைப் பார்க்கப் போய்விடுவேன். பள்ளி காலத்திலேயே இந்த ஆர்வம் என்னைத் தொற்றிக் கொண்டது. ஒருமுறை ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு வழக்கொன்றுக்காக ஆஜராக வந்திருந்த சமயம் நான் பாடசாலைக்கு செல்லாமல் அவரின் வழக்கு விவாதத்தைப் பார்க்க சென்றுவிட்டேன். அடுத்தநாள் பாடசாலைக்கு

சென்ற போது, நான் சினிமா பார்க்கப் போனதாக அதிபர் கண்டித்தார். அவரிடம் உண்மையைக் கூறியதும், என் ஆர்வத்தைப் பாராட்டினார். உண்மையில் இதுகாலம் வரை என் வாழ்க்கையில் மூன்றே மூன்று சினிமாப்படம்தான் பார்த்திருக்கின்றேன். கம்பராமாயணம், வெற்றிவீரன், திருட்டு ராமன் ஆகிய படங்களே, அதுவும் பால்ய பருவத்தில் பார்த்தது.

பள்ளி காலத்தில் என்னை ஈர்ந்த சட்டம், மேற்கொண்டு தொடர பின்புலம் அமையாததால், தனிப்பட்ட முயற்சியில் 1964ம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி சட்டவாதிகளிடம் உதவியாளராக காலடி எடுத்து வைத்தேன்.

இதற்கு முன்னோடியாக ஒரு சம்பவம் நான் 5ம் தரத்தில் படிக்கும்போது, ஜீ. ஜீயின் தேர்தல் பிரசாரத்தின் போது அவருடைய பிரதிநிதியின் வேட்பாளரின் வாகனத்தில் ஏறி அவர்களுடைய சின்னத்தைக் கூறி ஜே! ஜே! என்று கோஷமிட்டது இன்னும் என் நினைவில் நிழலாடுகிறது. இன்றுவரைக்கும் அந்த தீர்க்கதரிசியின் நிழலிலிருந்து மாறவில்லை. தொழில் நிமித்தம் முதலில் காலஞ்சென்ற பிரபல நியாயதுரந்தர் என். ரி. சிவஞானத்தின் உதவியாளராகவும் அத்துடன் சிறிது காலத்தின் பின்னர் நாடறிந்த சட்டவாதி எஸ். ஆர். கனகநாயகத்தின் உதவியாளராகவும் பலகாலம் பணியாற்றினேன். அதன்பின்னர் பிரசித்த நொத்தாரிசு பரீட்சையில் சித்திபெற்று யாழ்ப்பாணத் திலேயே எனது தொழிலை சிறப்புறத் தொடர்ந்தேன். சட்டவறிஞர என்று

அழைக்கப்படும் நொத்தாரிசுப் பதவியில் நேர்த்தியாகவும் கண்ணியமாகவும் செயலாற்றிவந்தமையால் எனது சேவை மிகவும் பிரகாசித்தது.

குடியியல் நடைமுறைச் சட்டக்கோவை சிவில் நீதிமன்ற செயற்பாடுகள் பற்றி நுண்ணிய அறிவைப் பெற்றேன்.

1992 முதல் கொழும்புக்கு இடம்பெயர்ந்து இளம் சட்டத்தரணிகளின் வழிகாட்டியாக இருந்துவருவதுடன் காணி வழக்குகள், தத்துவ வழக்குகள், விவாகரத்து வழக்குகள் உள்ளிட்ட குடியியல் வழக்குகளுக்கான பிராது, மனு, சத்தியவோலை, சொத்துப் பட்டியல் போன்றவற்றை வரைந்தும் ஆலோசனை வழங்கியும் வருகின்றேன்.

எனது சட்டப் புலமையை நன்கறிந்த உச்சநீதிமன்ற பிரதம நீதியரசர்களாயிருந்த கனம் ஜி.பி.எஸ் த சில்வா மற்றும் எஸ்.சர்வானந்தா போன்றோரின் பரிந்துரைகளின் பேரில் எனது தேசிய அடையாள அட்டையில் பிரசித்த நொத்தாரிசும் சட்ட உதவியாளரும் என்ற தொழிற்பெயர் இடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**சட்டத்துறையில் நீங்கள் பெற்ற சான்றிதழ்கள் பற்றி சொல்லுங்கள்....**

உச்ச நீதிமன்ற பிரதம நீதியரசர் ஜீ.பி.எஸ்.த சில்வா பிரதம நீதிபதியாக கடமையாற்றிய சமயம் அவருடைய

அனுமதியுடன் உச்சநீதிமன்ற பாதுகாப்பு அலுவலகத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை படத்துடன் இவை யாவற்றுக்கும் ஆதாரமாக அமைந்தது.

- இளைப்பாறிய உச்ச நீதிமன்ற நீதிபதி கனம் எஸ். சர்வானந்தா அவர்கள் வழங்கிய சான்றிதழ்.
- கனடா Roach, Schwartz & Associates வழங்கிய சான்றிதழ்.
- சமாதான நீதிபதி பட்டம் வழங்கப்பட்ட சமயம் The Island பத்திரிகையில் வெளியான செய்தி.
- 40 வருடங்கள் பூர்த்தியடைந்த சமயம் வீரகேசரி, தினக்குரல், சுடர்ஒளி மற்றும் உதயன் ஆகிய பத்திரிகைகளில் வெளியான வாழ்த்துச் செய்திகள்.
- சட்டக்கல்லூரி செல்லாது சட்டத்தைப் பயிற்றுவித்த என்னுடைய குருமார்கள் வழங்கிய சான்றிதழ்கள்.
- சிரேஷ்ட குரு அட்வகேற் எஸ். ஆர். கனகநாயகம், கனிஷ்ட குரு என். ரி. சிவஞானம் புரொக்டர் எஸ். சி அத்துடன் பிரசித்த நொத்தாரிசும்.
- வேலணையூர் ஆசிரிய மணி பண்டிதர் மருதையனார் அவர்களிடம் சைவ சித்தாந்த தத்துவத்தையும் ஓரளவுக்கு கற்றேன். இவர்களையும் இவ்விடத்தில் நினைவு கூர கடமைப்பட்டுள்ளேன்.

**இன்றைய தலை முறைக்கு நீங்கள் கூறவிரும்புவது ...**

வயது முதிர்ச்சியடைந்த நேரத்தில் நாம் செய்யக் கூடியது வாழ்க்கையில் நன்றி மறவாமல் நன்றிக்கடனைச் செலுத்துவதே முக்கியமானது.

அந்தவகையில் கொழும்புத் தமிழ்ச் சங்கம் இன்று கொழும்பு மாநகரிலே எழுபது வருடங்களுக்கு மேலாக வளர்ந்து வந்திருக்கின்றது. கொழும்புத் தமிழ்ச் சங்க வளர்ச்சியை மேலும் மேலும் வளரச்செய்ய ஆக்கபூர்வமான செயல்களைச் செய்ய வேண்டும். அந்தவகையில் கொழும்புத் தமிழ்ச் சங்கம் தமிழ்த்தேசிய இனத்தின் சொத்தென நான் பலமுறை வலியுறுத்தி வந்து கொண்டிருக்கின்றேன். அதுமட்டுமல்ல கொழும்புத் தமிழ்ச் சங்கம் இன்றைய காலகட்டத்திற்கேற்ப ஓர் கல்விக்கூடமாக செயற்பட்டு வருகின்றது என்பதை நினைவூட்ட விரும்புகின்றேன். கொழும்புத் தமிழ்ச்சங்கம் வாரந்தோறும் புதன்கிழமையும் வெள்ளிக்கிழமையும் நிகழ்ச்சி நடாத்திவருகின்றது. அந்நிகழ்ச்சிக்கு நான் சென்றபோது பல அறிவுரைகளைக் கற்றிருக்கின்றேன். சுவாமி விவேகானந்தா கன்னியா குமரியிலிருந்து இமயமலை வரை பிரசாரம் செய்து வந்தபோது அவர் வலியுறுத்திய இருவிடயங்கள் ஆவன, பட்டினியால் வாடுகின்ற ஏழைகளுக்கு சாப்பாடு கொடுக்க வேண்டும், அதேபோல் குடியிருக்க வீடு இல்லாமல் இருக்கும் ஏழைகளுக்கு வீடு அமைத்துக் கொடுக்க வேண்டும். இந்தக் கொள்கையை

சுவாமி அவர்கள் அமெரிக்காவுக்கு சென்று அங்கு இதனை வற்புறுத்தி பிரசாரம் செய்தார். கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு என்பதை நாம் ஒவ்வொருவரும் இன்றயை காலகட்டத்தில் உணர்ந்து செயற்பட வேண்டியது முக்கியம். அந்தவகையில் கொழும்புத் தமிழ்ச் சங்கம் பல விடயங்களை அறிவுரைகளை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தி வருகின்றது. அதுமட்டுமல்ல கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அமைந்திருக்கும் நூலகம் மிகவும் முக்கியமானது. சட்டத்துறையில் நாம் எங்கு நிற்கின்றோம்? நாம் பல வழிகளிலும் எத்தனை தடைகள் இடையூறுகள் இருந்தும் முயற்சி செய்து முன்னேறிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் சட்டத்துறையில் எவ்வளவோ சட்ட நிபுணர்கள் வாழ்ந்து தமிழ்த் தேசிய இனத்திற்கு சேவையாற்றியிருந்தனர். அப்படிப்பட்டவர்களின் வழியிலேயே அந்தவகையில் இன்று செயற்படுவதற்கு ஆளில்லை ஏன்? இன்று ஏன் நாம் சட்டத்துறையில் பின்தள்ளப் பட்டிருக்கின்றோம் இதற்கு என்ன காரணம்? அந்தவகையிலே தமிழ்ச் சங்கத்திலே சட்டத்துறையை வளர்ப்பதற்காக சட்டப்பிரிவும் சேர்த்து உசார்த்துணைப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டு சட்டத்துறை வளர்வதற்கு கொழும்புத் தமிழ்ச்சங்கம் முன்மாதிரியாக நடவடிக்கை எடுத்துள்ளது. கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலுள்ள சட்டநூலகத்தில் சாதாரண மனிதர்கள் எவரும் அங்கத்தவராகச் சேர்ந்து சட்டநூல்களைப் பயன்படுத்தலாம். இச் சந்தர்ப்பத்தில் குறித்த சட்டநூலகத்தில் நன்றிக்கடனாக இரு சட்டமேதைகளின் நினைவாக ஓர் அன்பர் இலட்சக் கணக்குப் பெறுமதியான சட்டநூல்களை

வழங்கியிருக்கின்றார். அதில் முக்கியமாக தமிழில் இந்தியாவில் வெளிவந்த தமிழில் எழுதப்பட்ட சட்ட தீர்ப்புக்கள் அடங்கிய நூல்கள் தமிழில் சட்ட அகராதி போன்ற பல சட்ட நூல்கள் இருக்கின்றன. இந்தவிடயம் நன்றிக்கடனையும் சட்டத்துறையை வளர்ப்பதற்கு செயற்படுகின்ற செயலாகும்.

சொனற்றர் அட்வகேற் எஸ். ஆர். கனகநாயகம் அவர்கள் பாராளுமன்றத்திலே தனிச் சிங்களச் சட்ட மசோதா இயற்றப்பட்ட சமயம் அதனை எதிர்த்து தமிழினத்திற்காக பேசிய குறிப்பிட்ட முக்கிய வார்த்தையை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். தனிச் சிங்கள சட்ட மசோதாவை இயற்றி தமிழ்க் கலாசாரத்தையோ சைவத்தையோ தமிழர்களையோ அழித்துவிடமுடியாது. என்று கூறினார்இ அவர் அன்று கூறிய வார்த்தை வீண்போகவில்லை.

தமிழ் பேசும் இனம் உலகம் முழுவதிலும் பரந்து செறிந்து வாழ்கின்றார்கள். தமிழ் கலாசாரத்தை ஆங்காங்கே நிலைநாட்டி வருகின்றார்கள். அதேபோன்று இந்துபோர்ட் இராஜரத்தினம் 1927ம் ஆண்டு கொழும்பு வாழ் சைவ இளைஞர்களுக்கு ஒரு வேண்டுகோள் விட்டார். அவ்வேண்டு கோளுக்கமைய இன்று உலகம் முழுவதும் சைவர்கள் பிள்ளையாரை வைத்து வணங்கிக் கொண்டிருக்கின்றார்கள். தமிழர் கலாசாரத்தை அழிக்க முடியாது என்பதற்கு இவை யெல்லாம் ஓர் எடுத்துக்காட்டு. சட்டத்துறையில் முன்னைய சட்டத்தரணிகள் நடந்து கொண்ட விதத்தை மேலே குறிப்பிட்டிருந்தேன். அதேபோன்று அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம்

சட்டத்தை கையாண்ட வழி. 1956ம் ஆண்டு யூன் 5ந் திகதி பாராளுமன்றத்திற்கு முன்னால் தமிழினம் சத்தியாக்கிரகம் இருந்த சமயமும் 1958ம் ஆண்டு ஸ்ரீ எதிர்ப்பு போராட்டத்தில் நடந்த சம்பவத்திலும் கொழும்பிலே வாழ்ந்த தமிழினம் தாக்கப்பட்டு அகதிகளாக கொழும்பிலே பாதுகாப்பான இடத்தில் வைத்திருந்த சமயம் அங்கேயும் அவர்களுக்கு தீமை ஏற்படும் என்பதை அறிந்து அவர்களை யாழ்ப்பாணம் அனுப்ப வேண்டும் என்று முயற்சி செய்தார். அந்நேரம் அல்பிரட் தம்பிஐயாவின் உதவியுடன் யாழ்ப்பாணம் அனுப்ப உதவி செய்திருந்தார். அந்நேரம் ஒரு எதிர்ப்பு ஏற்பட்டு வெளிநாட்டுக் கப்பல்கள் போவதற்கு வழியும் இல்லை அனுமதியும் இல்லை என்று சட்டவல்லுணரான அன்றைய பிரதமர் எடுத்துக் கூறினார்.

அதற்கு மாறாக ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஒரு நாட்டில் கலவரம் நடைபெற்ற சமயம் வெளிநாட்டுக் கப்பல்களை உபயோகிப்பதற்கு அனுமதி பெறத் தேவையில்லை என்ற சட்டத்தை எடுத்துக்காட்டி வெளிநாட்டுக் கப்பல்கள் மூலம் அகதிகளாக இருந்த தமிழ்மக்கள் யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தார். இதனைப் போல் பல சட்டத்துறையில் தமிழ்த்தேசிய இனத்திற்காக தீர்க்க தரிசனத்துடன் அமரர் ஜீ. ஜீ. நடந்தவிடயங்கள் பல நினைவு கூரத்தக்கவை.

தாயக ஒலி
THAYAKA OLI
இரு திங்கள் ஏடு 11

*வைகாசி-ஆனி 2014 வெளிவந்தது*

# பொன்விழாக் கண்ட க.மு.தர்மராசாவின் ஆற்றல்மிகு சேவை -

**சி.வி.விக்னேஸ்வரன்**
**வடமாகாண முதலமைச்சர்**

க. மு. தர்மராசா தமது தொழலில் ஐம்பது வருடகாலம் பூர்த்தியடைந்ததையிட்டு மன மகிழ்ச்சி அடைகிறேன். 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சட்டத்துறையில் நான் நுழைந்து ஐம்பது வருடங்கள் பூர்த்தியடைகின்றன.

சிலருக்கு சில விடயங்கள் படிக்காமலேயே புலப்படும். அதற்குக் காரணம் அவர்கள் அதற்குரிய படிப்பை, அறிவை சென்ற பிறவியிலே பெற்றுவிட்டார்கள் என்பதால்தான் என்று கூறுவார்கள் மாகான்கள். இதைப் பலர் ஏற்கமாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் மிகச் சிறிய வயதில் சிறு பிள்ளைகள் சிலர் அதிசயிக்கத் தக்கவகையில் நடந்து கொள்கின்றார்களே! அதற்கான காரணம் என்ன? மரபணுக் களில் இருந்து வருவதாக விஞ்ஞானிகள் கூறுவார்கள். ஆனால் அச்சிறுவர்களின் முன்னையோர் வாழ்க்கையைப் பார்த்தால்

அப்படி எதுவுமே அதிசயத்தக்க வகையில் அவர்கள் வாழ்ந்து கொள்ளவில்லை என்பது தெரியவரும். அப்படியானால் சில குழந்தைகளின் அதிவிசேட தகைமைகளுக்குக் காரணம் என்ன? முன்னைய பிறவிகளில் அவர்கள் பெற்ற தகமையே காரணம் என்று கூறுவதை முழுமையாக மறுக்க முடியாதுள்ளது.

தர்மராசாவிடம் கேட்டால் அதுதான் சக்தி என்பார். கம்யூனிசத்தில் திளைந்திருந்த அவர் சக்தி என்று கூறும்போது அது மதங்களுக்கு அப்பாற்பட்டு மின்சாரம் போல் எங்கும் நிறைந்திருக்கும் ஒரு விபரிக்க முடியாத சக்தியையே அவர் குறிப்பிடுகிறார் என்று கொள்ளலாம்.

போன பிறவியோ அல்லது அந்த சக்தியோ எதுவாக இருப்பினும் தர்மராசாவிற்கு இயற்கையிலேயே சட்ட சம்பந்தமான ஒரு பார்வையை நோக்கை, தகைமையை ஓர் இயற்கையான மனப்போக்கை அது வழங்கியுள்ளது.

மிகப்பொருத்தமாக கனேடிய நாட்டுச் சட்டத்தரணி றோச் என்பவர் தர்மராசாவை "am idea man" என்று ஆங்கிலத்தில் அழைத்திருந்தார். கருத்துக்கள் வழங்கும் மனிதர் என்று அதைத் தமிழில் மொழிபெயர்த்து விடலாம். ஆனால் அந்த ஆங்கிலச் சொற்றொடர்தான் அவருடைய குணாதிசயங்களைத் தெட்டத்தெளிவாக எடுத்தியம்புகின்றது. சட்டத்தில் எந்தக் கேள்வி எழுந்தாலும் அவர் மூளை கணினி

வேகத்தில் வேலை செய்யும். இப்படி இருக்குமா, அப்படி இருக்குமா அல்லது ஏன் இப்படி இருக்கக்கூடாது என்றெல்லாம் அவர் மூளை சிந்தித்துச் செயலாற்றி சட்ட முறைப்படி ஏற்கக்கூடிய சரியான பதிலை அல்லது அதற்கு அண்மையதான ஒரு பதிலைக் கண்டுவிடும்.

அவர் வாழ்க்கையை உன்னிப்பாகக் கவனிக்கும் ஒருவர் பல தலை சிறந்த சட்டத்தரணிகளுடன் பழகி அவர்களின் எண்ணக் கோர்வைகளைப் பக்கத்தில் இருந்து கிரகித்துக் கொண்டே எது எவ்வாறு அமைய வேண்டும் என்று சட்டரீதியாகப் பதிலிறுக்கும் பக்குவம் கொண்டவர் அவர் என்பதை உணர்ந்து கொள்வர்.

நான் 2004ம் ஆண்டு இளைப்பாறிய பின்னர் தான் அவருடன் நெருங்கிப் பழக முடிந்தது. அதற்கு முன்னர் அவர் பல சட்டத்தரணிகளுக்குச் சட்ட அனுசரணை யாளராகக் கடமையாற்றி வந்ததை அறிந்திருந்தேன். என்னுடன் அவர் இதுவரை பழகி வந்த நாட்களில் எந்த ஒரு விடயத்திலும் அவர் முறையாகச் சிந்தித்து அறிவுரை வழங்கும் அனுபவத்தையும் பெற்றுள்ளார் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

# க.மு.தர்மராஜா யார்?


அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம்

ஜி.ஜி. அவர்கள் 1964ம் ஆண்டு க.மு.தர்மராசாவை தனக்கு உதவியாளராக சேர்த்து விடுமாறு காலஞ்சென்ற சட்டத்தரணி சங்கரப்பிள்ளையிடம் கேட்டார். அதற்கு சட்டத்தரணி சங்கரப்பிள்ளை பதில் கூறியதாவது -

*"அவர் கமினியூஸ்ற் கொள்கை உடையவர். அவரது குடும்பம் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள். ஆனால் தர்மராசா என்.ரி.சிவஞானத்தில் தனிப்பட்ட முறையில் அன்பும் பக்தியுமாக இருந்தபடியால் இன்று காங்கிரஸ் கட்சியை ஆதரித்து செயற்படுகின்றார்." கமுதரின் முக்கிய அம்சம் ஜீ.ஜீ. பொன்னம்பலம் என்ற நாமத்தையும் அவரின் சைக்கிள் சின்னத்தையும் ஆறு வயதில் உச்சரித்தவர். அதனைத் தொடர்ந்து இன்றுவரையும் அமரர் ஜீ.ஜீ.யின் சேவையை திறமையை வெளிப்படுத்துபவரில் இவரும் ஒருவர். தர்மராசா தொடர்ந்து மூன்று பரம்பரையாக அதாவது அமரர் ஜீ.ஜீ., மாமனிதர் குமார் பொன்னம்பலம், மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரை ஆதரித்து வருகிறார். அமரர் ஜீ.ஜீ.தீர்க்கதரிசி, மாமனிதர் குமார் பொன்னம்பலம் தியாகி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தீர்க்கதரிசியும் தியாகியும்*

*ஆவார். அந்தக் காரணமாக மூன்று பரம்பரையும் தொடர்ந்து ஆதரித்து நன்றி மறவாமல் செயல்ப்பட்டு வருகின்றார்*


## சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி (வாழ்த்துரை)



திரு. தர்மராசாவை 1964ம் ஆண்டு தை மாதம் 10ந் திகதியளவில் வாழ்த்திய வாழ்த்துரை *"உண்மையாக காரைநகர் மண்ணில் பிறந்தவர் தான் என்று முதுகில் தட்டிக் கொடுத்தார்.*

இவர் 1936ம் ஆண்டு பாராளுமன்றத்தில் ஒரு மேலதிக வாக்கினால் சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டார். அச்சமயம் யோகர் சுவாமி அவர்கள் பாராளுமன்றத்தில் அமர்ந்திருந்தார். இவரை சபாநாயகராக தெரிவு செய்தது இடதுசாரிகளைச் சேர்ந்த எதிர்க்கட்சியே ஆகும்.

## ஆசிரியமணி மருதையானர்



*தான் கண்ட ஐந்து பேருள் அன்பர் தருமரும் ஒருவர். அவர்களுள் முதல் நான்கு பேர் ராஜாஜி, காம்ராஜ், சேர். வைத்திலிங்கம் துரைசாமி, இந்துபோர்ட் இராஜரட்ணம் அடுத்து அன்பர் கமுதர் என்றார்.*

ஆசிரியமணி மருதையனார் யார் என்றால் 1937ம் ஆண்டு இந்தியாவிலிருந்து மருதையனார் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் கடிதம் அனுப்பியபோது அக்கடிதம் வேலணையூர் சரவணையில் அமைந்திருந்த மந்திர இல்லத்திற்கு சென்றடைந்தது. 1937ம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கம் ஊர்காவற்றுறை தொகுதிக்கும் பண்ணைப்பாலம் இணைக்கப்படாதகாலகட்டத்தில்தான் அக்கடிதம் அவரது இல்லத்திற்கு சென்றடைந்தது.


## அட்வக்கேற் கனகநாயகம் மற்றும் என்.ரி.சிவஞானம்

இவர்கள், கமுதரின் சிரேஷ்ட குருவும் கனிஸ்ட குருவும் ஆவார்கள். அவர்கள் இருவரிடமும் சட்டக்கல்லூரி செல்லாது சட்டத்தைக் கற்றதற்கான நன்றிக்கடனாக கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அவர்கள் இருவரினதும் உருவப்படங்கள் திரைநீக்கம் செய்யப்பட்டு இலட்சக் கணக்கான பெறுமதி கொண்ட சட்டநூல்கள் வழங்கப் பட்டிருக்கின்றன. கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலுள்ள சட்டநூலகப் பிரிவு இன்றைய காலகட்டத்தில் சட்டத் துறையைச் சார்ந்தவர்களுக்கு மிகவும் முக்கியமானது.

## கொழும்புத் தமிழ்ச்சங்க புதிய உசாத்துணை நூலகப்பிரிவினை முதன் முதலாத சட்டப்பிரிவும் உட்பட நன்றிக்கடனாக நினைவு கூரப்பட்டவர்கள்.

- உயர்திரு. அட்வகேற் எஸ். ஆர். கனகநாயகம் (முன்னாள் செனற்றர்)
- சிரேஷ்ட சட்டத்தரணி திரு. என். ரி. சிவஞானம்
- முன்னாள் வேலணை மத்திய கல்லூரி (சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மகாவித்தியாலயம்) அதிபர் உயர் திரு. பொ. கேதாரநாதன்

**கொழும்பு தமிழ்சங்கத்தில் உசாத்துணை நூலகப்பிரிவினை (சட்டப்பிரிவு உட்பட) திறந்து வைத்த போது நன்றிக்கடனாக நினைவு கூரப்பட்டவர்கள்...**




நூல் நிலையத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி.சாந்தா அபிமன்னசிங்கம், அமரர் அட்வகேற் எஸ்.ஆர்.கனகநாயகம் அவர்களின் உருவப்படத்தினை திரைநீக்கம் செய்துவைக்கின்றார்.



அமரர் எஸ்.ஆர்.கனகநாயகத்தின் உருவப்படத்திற்குக் கீழ் செல்வி.சாந்தா அபிமன்னசிங்கம், திருவாளர் கனக்-ஈஸ்வரனும், பிள்ளைகளும், ஏனையோரும் காணப்படுகின்றனர்.



அமரர் N.T.சிவஞானத்தின் உருவப்படத்தை ஜனாதிபதி சட்டத்தரணி திரு.கனக்-ஈஸ்வரன் திரைநீக்கம் செய்து வைக்கின்றார்.



அமரர் என்.ரி.சிவஞானம் அவர்களின் உருவப்படத்தின் கீழ் திரு.கனக்-ஈஸ்வரன், திரு.அ.விநாயகமூர்த்தி, செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், திரு.க.மு.தர்மராசா ஆகியோர் காணப்படுகின்றார்கள்.



கொழும்பு பல்கலைக்கழக கல்விபீடாதிபதி பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்கள்
சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி மகாவித்தியாலய (வேலணை மத்திய கல்லூரி)
முன்னாள் அதிபர் அமரர் பொ.கேதாரநாதன் அவர்களின்
உருவப்படத்தினை திரைநீக்கம் செய்கின்றார்



அமரர் பொ.கேதாரநாதனின் உருவப்படத்தின் கீழ் பேராசிரியர் சோ.சந்திரசேகரம்,
பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், பேராசிரியர் சபா.ஜெயராசா
மற்றும் முக்கிய பிரமுகர்களும் காணப்படுகின்றனர்.




திரு.க.மு.தர்மராசா அவர்களுக்கு
திரு.இலகுப்பிள்ளை அவர்கள் மாலை அணிவிக்கின்றார்



மங்கள விளக்கேற்றிய பின் முக்கிய பிரமுகர்கள்
மேடையில் அமர்ந்துள்ளார்கள்

**24.08.2014 அன்று கொண்டாடப்பட்ட க.மு.தர்மராசா அவர்களின் 73வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது இல்லத்தில் அவரின் பெறாமக்களின் விருப்பத்திற்கு இணங்கி இராப்போசன விருந்து நடைபெற்ற சமயம் எடுக்கப்பட்ட புகைப்படங்கள்.**




பிறந்தநாள் கேக் வெட்டுவதற்கு முன்னர் மெழுதுவர்த்தி ஊதுகின்றார்




பிறந்தநாள்
கேக்
வெட்டுகின்றார்





டாக்டர் சிறிசேனா (பிரசவ வைத்தியர், 72 வயது) அவர்களுக்கு
திரு.தர்மராசா அவர்கள் பிறந்தநாள் கேக் வெட்டிக் கொடுக்கின்றார்



டாக்டர் சிறிசேனா அவர்கள் திரு.தர்மராசா அவர்களுக்கு கேக் ஊட்டுகிறார்



பெறாமகள் பேராசிரியர் நளாயினி அவர்கள் கேக் ஊட்டுகிறார்



திரு.தர்மராசா அவர்கள் பேராசிரியர் நளாயினி அவர்களுக்கு
கேக் ஊட்டுகிறார்



பெறாமகள் டாக்டர் வசந்தி தேவராஜா அவர்கள்
திரு.தர்மராசா அவர்களுக்கு கேக் ஊட்டுகின்றார்



திரு.தர்மராசா அவர்கள் டாக்டர் வசந்தி தேவராஜாவுக்கு கேக் ஊட்டுகின்றார்



திரு.தர்மராசா அவர்கள், கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர்
இரகுபதி பாலஸ்ரீதரன் அவர்களுக்கு, கேக் கொடுக்கின்றார்



திரு.தர்மராசா அவர்கள் கொழும்புத் தமிழ்ச்சங்க முன்னாள் செயலாளரும்
தற்போதைய இலக்கிய குழுச் செயலாளருமான
திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களுக்கு கேக் கொடுக்கின்றார்



திரு.தர்மராசா அவர்கள், முன்னாள் டெய்லி நியூஸ் பத்திரிகையின் உதவி ஆசிரியரும் தற்போதைய ஊடகவியலாளர்களின் ஆலோசகருமான திருவாளர் பாலசிங்கம் அவர்களுக்கு கேக் கொடுக்கின்றார்.



திரு.தர்மராசா அவர்கள் முன்னாள் தினகரன் பத்திராதிபரான திருமதி.ஆனந்தி பாலசிங்கம் அவர்களுக்கு கேக் கொடுக்கின்றார்.



திரு.தர்மராசா அவர்களுக்கு முன்னாள் ஹட்டன் நஷனல் வங்கி உதவி முகாமையாளரான திரு.பொன்னம்பலம் சிறிதரன் அவர்கள் கேக் ஊட்டுகிறார்



திரு.தர்மராசா அவர்களுக்கு முன்னாள் உதவி அரசாங்க அதிபரும் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தப்பா அவர்களின் செயலாளரும் பிரசித்த நொத்தாரிசுமான திரு.ச.இராமலிங்கம்(78வயது) அவர்கள் கேக் ஊட்டுகிறார்



பள்ளிக்காலத்து அரிவரியிலிருந்து தொடர்ந்து இன்றுவரை நண்பரான
இளைப்பாறிய அரச உத்தியோகஸ்தர்
திரு.கனகலிங்கம் அவர்கள் திரு.மு.தர்மராசாவிற்கு கேக் ஊட்டுகிறார்



சட்டமாணவன் ஆனந்தராஜா டொமினிக் அவர்கள்
திரு.மு.தர்மராசா அவர்களுக்கு கேக் ஊட்டுகிறார்



**80 வயது தாண்டிய ஊடகவியலாளர் படப்பிடிப்பாளரான திரு.இராமலிங்கம் அவர்களுக்கு திரு.தர்மராசா அவர்கள் கேக் கொடுக்கின்றார்.**



**பெறாமக்கள், பேராசிரியர் காலோ பொன்சேக்காவும் அவரது பாரியாரும், பேராசிரியர் சந்திரசேகரம், டாக்டர் சிறிசேனா ஆகியோருடன் திரு.தர்மராசா அவர்களும் நிற்கின்றார்**



டாக்டர் வசந்தி தேவராஜா, திரு.சிறிதரன், திருமதி.சிவலோகநாதன்
மற்றும் திரு.மகாதேவா ஜெயா ஆகியோர்



கொழும்பு தமிழ்சங்க செயலாளர் தம்புசிவா, முன்னாள் செலான் வங்கி முகாமையாளர்
கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் இரகுபதி பாலா, சிறிதரன்,
செல்வி நீதா சதாசிவம், சட்டத்தரணி சசாங்கன் மற்றும் நண்பன் கனகலிங்கம்



காலஞ்சென்ற திருமதி.திலகவதி தர்மராசா அவர்களின்
உறவினர்களும் நண்பர்களும்



இராப்போசனத்தில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினர்



பெறாமக்கள் இருவரும்


## 73ஆவது பிறந்ததின நிகழ்ச்சியில் முக்கிய குறிப்பு

1. இப் பிறந்ததின நிகழ்ச்சியில் 82வயது தாண்டிய சிங்கள டாக்டர் சிரேஷ்ட பேராசிரியருமான காலோ பொன்சேகாவும் அவரது பாரியாரும் பங்குகொண்டார்கள்
2. 80வயது தாண்டிய ஊடகப் படப்பிடிப்பாளர் இராமலிங்கம் அவர்களுக்கு கேக் தர்மராசாவால் கொடுக்கப்பட்டது.
3. 72 வயது தாண்டிய சிங்கள மகப்பேற்று மருத்துவர் சிறிசேனாவுக்கு கேக் வழங்கப்பட்டது
4. கல்வி வளர்ச்சிக்காக சேவையாற்றிக் கொண்டிருக்கின்ற ஓய்வுபெற்ற பேராசிரியர் சந்திரசேகரம் கலந்து கொண்டார்.
5. கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர், செயலாளர், இலக்கியக் குழுச் செயலாளர் ஆகியோர்களுக்கு கேக் வெட்டி பகிர்ந்தளிக்கப்பட்டது.
6. 78 வயது தாண்டிய ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபரும், ஜனாதிபதி சட்டாலோசகர் பாயிஸ் முஸ்தப்பா அவர்களின் செயலாளருமான திரு.ச.இராமலிங்கம் அவர்களும் பங்கு கொண்டார்.
7. 73 வயதுடைய பள்ளிக்காலத்து அருவரியிலிருந்து இன்றுவரை தொடர்ந்து வரும் நண்பன் திரு.கனகலிங்கம் கலந்து கொண்டார்.

# திரு.க.மு.தர்மராஜா அவர்கள்
# பங்கேற்ற நிகழ்வுகளில் சில...











Fast Printers : 289-1/2, Galle Road, Colombo - 06 T.P-0112362312.